1982 மார்ச் 16]

வானூரிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை.

*வினா எண். 487—திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூரிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை அரசு ஏற்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) அண்டு (ஆ) இல்லை, எனினும் இங்கு ஆரம்பசுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்க 1—8—1981 அன்று உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே இம் மருந்தகத்தை அரசு ஏற்று நடத்த வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் மருத்துவமனை இல்லாத காரணத்தால் பாண்டிச்சேரிக்கும், திண்டிவனத்திற்கும் செல்லக் கூடிய சூழ்நிலையிருக்கிறது. தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் அங்கே ஆரம்பிக்கப் போவதாக சொன்னது, அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கருதுகிறேன். அதை இந்த ஆண்டே துவங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் உத்தரவு போட்டு விட்டோம். வேலைகள் கூட அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அரசு மொத்தமாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிப்பதாக முடிவு செய்து, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாய் வரையில் வைத்துக்கொண்டு மேலும் ரெக்கரிங்காக 2, 3 இலட்சம் செலவில் வேலைகளைச் செய்யலாம் என்று ஜி.ஓ. இஷ்யூ செய்திருக்கிறோம். 6 மாதங்களுக்குள் முடித்துவிடலாம் என்று கருதுகிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வானூர் இப்போது தாலுக்கா தலைநகரமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்கிற காரணத்தால் அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து மேலும் இந்த திட்டத்தை விரைவில் முடிப்பதற்கு முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இந்த ஆரம்ப சுகாதார நிலையமே ஆரம்பிக்கவிருக்கிறோம். தாலுக்கா ஹெட்குவாட்டர்ஸ் என்ற பிரச்சினைக்கு உள்ளே போகாமல், இப்போது கட்டப்படுகிற ஆரம்ப சுகாதார நிலையம், இது வரையில் கட்டிய ஆரம்ப சுகாதார நிலையத்தை விட மாடர்னாக இருப்பதுடன், ஒரு தாலுக்கா மருத்துவமனைக்கு உரிய சில அம்சங்களையும் கொண்டிருக்கும். அந்த மருத்துவ மனையே தேவையான பணிகளைச் செய்யும் என்று கருதுகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி பெரிய மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக மாற்றுவதற்கு என்னென்ன அடிப்படைகள் தேவை? ஊராட்சிகள் தங்களுடைய பங்குக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் கொடுக்கலாம். இருந்தாலும் கொள்கைப் பிரச்சினையாக இருப்பதால், கேள்வி நேரத்தில் சொல்வது சரியாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உதகமண்டலம் அரசு தலைமை மருத்துவமனை.

*வினா எண், 488—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் தலைமை மருத்துவமனையிலுள்ள சிறப்பு வார்டுகளின் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) உதகமண்டலம் தலைமை மருத்துவமனையில் மலைப் பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் வார்டின் மேல்தளத்தில் புதிதாக 15 படுக்கைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன இவைகள்,

ஏ வகுப்பு	1
பி வகுப்பு	2
சி வகுப்பு	12

இது விரைவில் செயல்படுத்தப்படும்.